வேளாண்மை - உழவர் நலத் (பக) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

**கடித (டி) எண்.108, நாள்: 05.05.2023.**

அனுப்புநர்
திரு. சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப.,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

அய்யா,

பொருள்: வேளாண்மை – உழவர் நலத் துறை - 2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை அறிவிப்பு எண்.57 – "வேளாண்மையில் நானோ தொழில்நுட்பம்" பரவலாக்குதல் – செயல்முறை அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1. 2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "வேளாண்மையில் நானோ தொழில்நுட்பம்" குறித்த அறிவிப்பு.
2. தங்களது கடித எண்.TNAU/ Agriculture Budget Announcement (2023-2024)/ 2023, நாள் 21.04.2023.

*****

2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

57) வேளாண்மையில் நானோ தொழில்நுட்பம்

"வேளாண்மையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தவல்லதாக நானோ தொழில்நுட்பம் அறியப்பட்டுள்ளது. உரம், நுண்ணூட்டம், பூச்சிக்கொல்லி, விளைபொருளின் தரமறிதல், சேமிப்பு காலத்தை அதிகரித்தல் ஆகியவற்றில் நானோ தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. நானோ யூரியா ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்டு, ட்ரோன் தொழில்நுட்பத்துடன் சேர்த்துப் பரவலாக்கப்பட்டு வருகிறது.

..2..

நானோ தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான செயல்பாடுகள், பொருட்கள் மூலம் வேளாண்மையிலுள்ள தீர்க்கப்படாத சவால்களுக்குத் தீர்வு காணும் வண்ணம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நானோ தொழில்நுட்ப மையம் அமைக்கப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு வேர்வளர்ச்சி, வறட்சியைத் தாங்குதல், நுண்ணூட்டமளித்தல், விளைபொருட்களின் வாழ்நாளை அதிகரித்தல் ஆகியவற்றுக்கான பல நானோ தயாரிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு நானோ தொழில்நுட்பம் குறித்து விவசாயிகள் அறியும் வண்ணம் வேளாண் அறிவியல் நிலையம் (KVK), அட்மா திட்டம் (ATMA), ஆளில்லா வானூர்திக் கழகம் (Unmanned Arial Vehicle Corporation) மூலம் செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், பார்வை இரண்டில் காணும் தங்களது கடிதத்தில் அனுப்பப்பட்ட கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டு ஏற்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனடிப்படையில், இவ்வறிவிப்பினை செயல்முறைபடுத்தும் வகையில், கீழ்க்காணும் உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்:-

- வேளாண் அறிவியல் மையம் (KVK), ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கும் ஆளில்லா வானூர்திக்கழக அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்தல்;
- மேம்படுத்தப்பட்ட புத்துணர்ச்சியூட்டும் திரவம் (Enhanced Freshness Formulation) மற்றும் நானோ யூரியா போன்ற நானோ தயாரிப்புகளை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு பிரபலப்படுத்துதல்;
- செயல்விளக்கத்திற்குத் தேவையான பழங்களின் வாழ்திறனை அதிகரிக்கும் நானோ திரவக் கரைசலை உற்பத்தி செய்தல் மற்றும் நானோ யூரியாவை விநியோகித்தல்;
- சேலம், பொள்ளாச்சி பகுதிகளில் மா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் மூலம் பழங்களை நானோ திரவத்தில் நனைக்கும் முறையை செய்து காண்பித்தல்;
- நெல் பயிரிடப்படும் பகுதிகளில் நானோ யூரியா தெளிப்பதை செயல் விளக்கம் மூலம் விவசாயிகளுக்கு விளக்குதல்;

3. மேலும், இச்செயல்முறை அறிவுரைகளைத் தொடர்ந்து, தங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த மாதாந்திர முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

05/05/2023

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசுச் செயலாளருக்காக

05/5/2023

நகல்:-

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

முதன்மைச் செயலாளர் / ஆணையர், சர்க்கரைத்துறை, சென்னை-35.

இயக்குநர், வேளாண்மைத் துறை, சேப்பாக்கம், சென்னை-5.

இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சேப்பாக்கம், சென்னை-5.

இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-32.

செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை-32.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை-35.

இயக்குநர், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை, சென்னை-32.

அரசு முதன்மைச் செயலாளர், உயர்கல்வித்துறை, சென்னை-9 (தமிழ்நாடு ஆளில்லா வானூர்திக் கழகத்திற்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்குவதற்காக).

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆளில்லா வானூர்திக் கழகம், எண்.53, சர்தார் படேல் சாலை, தொழிற்நுட்பக் கல்வி இயக்குநரக வளாகம், கிண்டி, சென்னை-25.

வேளாண்மை – உழவர் நலத் (வேஉ1 / வ(ம)தி/அநமு3) துறை, சென்னை-9.

உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.